செ.வெ.எண்:15 நாள்: 09.01.18

<u>மாவட்ட ஆட்சியர் பத்திரிக்கைச் செய்தி</u>

2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதி எண் 12, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை, சென்னை அவர்களின் கடித எண். P&E 2(1)/129/2017, நாள்: 05.01.2018-ன் படி, 15.01.2018 (திங்கட்கிழமை) திருவள்ளுவர் தினம், 26.01.2018 (வெள்ளிக்கிழமை) குடியரசு தினம் 31.01.2018(புதன் கிழமை) வடலூர் வள்ளலார் நினைவு நாள் என்பதால் மேற்படி 15.01.2018, 26.01.2018 மற்றும் 31.01.2018 ஆகிய மூன்று தினங்களில் மாவட்டத்தில் உள்ள அனைத்து மதுபானக் கடைகள் மற்றும், மதுபானக் கூடங்களில் மதுபானங்கள் ஏதும் விற்கப்படாமல் மூடியிருக்கவேண்டும். மேலும், டாஸ்மாக் மூலம் நடத்தப்படும் சில்லரை மதுபானக் கடைகளின் மேற்பார்வையாளர்கள், எப்.எல்.3 ஹோட்டல் பார், உரிமையாளர்கள் **15.01.2018, 26.01.2018 மற்றும் 31.01.2018** ஆகிய மூன்று தினங்களில் கடலூர் மாவட்டத்தில் எந்த ஒரு இடத்திலும் மது விற்பனை நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும். இதனை மீறி எவரேனும் மதுபான கடைகளை திறந்து மதுபானங்கள் விற்றாலோ மற்றும் மது அருந்தும் கூடங்களை திறந்து வைத்திருந்தாலோ சம்பந்தப்பட்ட டாஸ்மாக் கடை மேற்பார்வையாளர், டாஸ்மாக் பார் உரிமையாளர்கள் மற்றும் ஹோட்டல் பார் உரிமையாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ.ம்)/- பிரசாந்த் மு.வடநேரே.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்.

-/உ.ந.உ.ப/-

9.1.18

உதவி ஆணையர் (கலால்),
கடலூர்.

9.1.18

வெளியீடு:- செ.ம.தொ.அ.கடலூர்.